# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 100/2023 LW- 3 PW- 3

| | |
|---|---|
| Name | : சித்ரா (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : குருசாமி |
| Village | : பண்ணியாமலை |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 49/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of February 2026

( 1, 3 முதல் 6 மற்றும் 8வது எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. 7ம் எதிரி இறப்பு. இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். )

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 2ம் எதிரி வெண்ணிலா என்பவரை தெரியும். கடந்த 07.05.2020ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் எங்கள் ஊர் பஸ் ஸ்டாப் அருகில் இரு சக்கர வாகனத்தில் என் மகனும், என் கணவரும் தோட்டத்திற்கு சென்றபோது சுரேஷ், பிரேம், ஸ்ரீதர் ஆகியோர் வழிமறித்து பிரேம் என்பவர் கம்பால் அடித்து என் மகனின் தலையில் காயப்படுத்தியும், சுரேஷ் என்பவர் கையால் என் மகனின் வலது காதில் அடித்தும், ஸ்ரீதர் என்பவர் இருசக்கர வாகனத்தை தள்ளிவிட்டு வண்டியை அடித்து நொறுக்கிவிட்டு என் மகனின்

செல்போனை எடுத்துக் கொண்டார்கள். சத்தம் கேட்டு நான் சென்று பார்த்தபோது என் மகனுக்கு தலையில் இருந்து ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது.

2) பின்னர் என் மகனை எனது அண்ணன் ராஜா(அ.சா.1)வின் வீட்டிற்கு அழைத்துச் சென்றோம். என் அண்ணன் அவருடைய காரில் எங்களை நத்தம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது சுரேஷ் என்பவர் வீட்டின் அருகில் ஸ்ரீதர், சுரேஷ், அண்ணாமலை, வெண்ணிலா ஆகியோர் எங்களை இரும்பு தடியை காட்டி வழிமறித்தார்கள். என் அண்ணன் காரை நிறுத்தியபோது வெண்ணிலா என்பவர் கார் கதவை திறந்து ரத்தக் காயத்துடன் இருந்த என் மகனை வெளியே இழுக்க முயற்சி செய்தபோது, நாங்கள் கதவை சாத்திக் கொண்டோம். அப்போது சுரேஷ் என்பவர் இரும்பு பைப்பை வைத்து காரின் வலது பக்க கதவில் அடித்துவிட்டார். பின்னர் சின்னத்தம்பி, ராஜேந்திரன், பழனி ஆகியோர் காரின் பின் பக்கம் கல்லைக் கொண்டு எறிந்தார்கள்.

3) பின்னர் அவர்கள் எங்களை அடித்துவிடுவார்கள் என்று நாங்கள் காரை எடுத்துக் கொண்டு நத்தம் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டோம். பின்னர் எதிரிகளின் பங்காளியான சக்தி என்பவரின் ஆட்டோவில் எதிரிகள் சுமார் 10, 12 பேர் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள். பின்னர் அங்கிருந்த செவிலியர் மற்றும் மருத்துவர்கள் காவல் நிலையத்திற்கு போன் செய்தவுடன் போலீசார் அங்கு வந்துவிட்டார்கள். அதுவரை என் மகனுக்கு சிகிச்சை எதுவும் எடுக்க முடியாமல் எதிரிகள் பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள். போலீசார் வந்ததும் நானும், என் கணவரும் சிகிச்சையில் இருந்த என் மகனுக்கு உதவியாக மருத்துவமனையிலே இருந்தோம். என் அண்ணன் அ.சா.1 மட்டும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். என் மகன் நத்தம் அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார். என் மகனின் வலது காதில் தொடர்ந்து ரத்தம் வந்து கொண்டிருந்ததால் அது கொரோனா காலம் என்பதாலும், எங்களை அவசர ஊர்தியில் ஏற்றி மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். கொரோனா காலம் என்பதால் என் மகனுக்கு ஸ்கேன்

எடுத்து பார்த்து வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து அன்றைய தினமே அனுப்பிவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

4) நான் தற்போது சொல்லிய விபரங்களை தான் போலீசார் விசாரிக்கும் போதும் சொன்னேன் என்றால் சரிதான். போலீசார் சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் மருத்துவமனையில் இருந்தபோது ஒருமுறை விசாரித்தார்கள், அதற்கு பிறகும் மூன்று, நான்கு நாட்கள் கழித்து வீட்டில் வைத்து ஒரு முறை விசாரித்தார்கள். அ.சா.1 எனது உடன்பிறந்த அண்ணன் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 4 எனது கணவர் என்றால் சரிதான். அ.சா.1 எனது ஊரில் கல்குவாரி நடத்தி வந்தார் என்றால் சரிதான். அதனால் எனது அண்ணனுக்கு போலீசார் மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் பழக்கம் என்றால் சரிதான்.

5) எனது அண்ணன் எவ்வாறு புகார் கொடுத்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார் கொடுக்க எனது அண்ணனுடன் யார், யார் சென்றார் என்று தெரியாது என்றால் சரிதான். எனது அண்ணன் புகாரில் தெரிவித்துள்ளவாறு எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் உண்மையில் அவ்வாறு நடைபெற்றிருந்தால் அது தொடர்பான புகாரை எனது மகனோ, நானோ அல்லது எனது கணவரோ கொடுத்திருப்போம் என்றாலும், ஏற்கனவே அ.சா.1க்கும், எதிரிகளுக்கும் இடையே உள்ள முன் பகையை வைத்து எதிரிகள் மீது பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான்கு சக்கர வாகனத்தில் சென்றபோது எதிரிகள் தாக்கியதாக சொல்லும் நிலையில் அதில் எனக்கோ, எனது கணவருக்கோ காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. காயம்பட்ட நபரை நான் அழைத்து வந்ததாக மருத்துவமனையில் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி தெரியாது.

6) சம்பவத்திற்கு முன்பு எதிரிகள் திருமலை, ஸ்ரீதர் ஆகியோர் கெட்ட வார்த்தையால் பேசியதை எனது மகன் வீடியோ எடுத்ததாக சொல்லும் சம்பவம் குறித்து நானோ, எனது ஊர்காரர்களோ காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான் மேற்படி விபரம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சம்பவ தேதியான 07.05.2020 ஆம் தேதி இரவு 10:30 மணிக்கு எனது மகன் ஜெயச்சந்திரன் நான்காம் எதிரி சுரேஷ் என்பவரது வீட்டில் புகுந்து தகாத வார்த்தைகளால் பேசி கத்தியால் சுரேஷ் என்பவரை குத்தியும், அவர் வீட்டு பெண்களை தகாத வார்த்தைகளால் பேசியதாகவும் எனது மகன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு சி.சி.எண்.20/2025 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், அது பொய் வழக்கு. சுரேஷை கத்தியால் குத்தி விட்டு எனது மகன் காரில் தப்பித்தபோது விபத்து ஏற்பட்டு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

7) எனது ஊரிலிருந்து நத்தம் காவல் நிலையத்தை தாண்டி தான் மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு சென்று போலீசாரிடம் எனது மகனுக்கு ஏற்பட்ட காயத்தை காண்பித்தோமா என்றால் இல்லை, அவருக்கு அதிகமான ரத்தப்போக்கு இருந்ததால் நேரடியாக மருத்துவமனைக்கு சென்று விட்டோம். எனது மகன் எனது அண்ணனுடன் காரில் தப்பிக்க முயற்சி செய்தபோது விபத்து ஏற்பட்டு அதில் காயம் அடைந்த காரணத்தினால் தான் எனது மகன் தனிப்பட்ட முறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் கார் சேதம் அடைந்ததால் தான் அந்த காரை காவல் நிலையத்தில் எனது அண்ணன் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல, என் அண்ணன் காவல் நிலையத்தில் காரை காண்பித்தார்.

8) அ.சா.1 உரிய அனுமதி பெறாமல் கல்குவாரி நடத்தி வருவதாக எதிரிகள் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்திருந்தார்கள் என்றாலும் அதில் ஏற்பட்ட முன் விரோதத்தை வைத்து எனது அண்ணன் எதிரிகள் மீது பொய்

புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. காரில் எனது மகனின் ரத்தம் உறைந்திருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான், நான் எனது மடியில் என் மகனை போட்டிருந்ததால் என் மீதும், அவரது ஆடைகள் மீதும் ரத்தம் வழிந்திருந்தது. சம்பவம் நடந்த அன்றே நான் எனது மகனை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துவிட்டேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரில் சம்பவம் ஆனது 7/5/2020 ஆம் தேதி இரவு 11 மணிக்கு நடந்ததாக தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மருத்துவர் அறிக்கையில் 08.05.2020 ஆம் தேதி இரவு 11 மணிக்கு சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டிருந்தால் அது தவறானது என்றால் சரிதான்.

9) நான் சொல்லும் தேதியில் எனது மகனை சிகிச்சையில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் சுரேஷ் என்பவரை கத்தியால் குத்தியதால் தான் அந்த சம்பவத்திற்கு மறுநாள் சென்று மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கையானது சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து பதிவு செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது அண்ணனின் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி நான்கு நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் என்னை மருத்துவமனையில் வைத்து கொலை மிரட்டல் விடவில்லை என்றால் சரியல்ல.

10) நான் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெற்று இருந்தால் மருத்துவ அதிகாரிகள் எதிரிகள் மீது புகார் கொடுத்து இருப்பார்கள் என்றாலும், அதனால் தான் புகார் கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்லும் விதத்தில் ஆட்டோவில் 15 நபர்கள் வருவதற்கு வாய்ப்புகள் இல்லை என்றாலும், எனது வயதான அப்பா ஏகாந்தம் என்பவரை தான் சக்தி என்பவரது ஆட்டோவில் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார் என்றாலும் சரியல்ல. சக்தி என்பவரும் இவ்வழக்கில் எதிரியாக சேர்க்கப்பட்டிருப்பார் என்றால் சரியல்ல.

11) சம்பவ இடத்திற்கு அருகே யார், யார் வீடுகள் உள்ளது என்று தெரியுமா என்றால் எதிரிகளின் வீடுகள் உள்ளது. சம்பா இடமான ரோட்டிற்கு தென்புறம்

இரண்டு பெட்டிக்கடைகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் குறித்து அவர்களை விசாரணை செய்தால் உண்மை தெரியவரும் என்றால் சம்பவம் நடைபெறும் பொழுது அந்த பெட்டிக்கடை மூடி இருந்தது. நான் சொல்வது போல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1க்கும், எதிரிகளுக்கும் உள்ள முன் பகையை வைத்து பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகன் 4ம் எதிரியான சுரேஷ் என்பவரை கத்தியால் குத்திய வழக்கில் இருந்து தப்பிப்பதற்காகவும் எதிரிகள் மீது பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.17 15:16:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்